# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.18/2017 நாள்.26-04-2017

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் **மு.சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் **மு.அன்பரசு** ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழு சார்பில் 25-04-2017 முதல் 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

இன்று 26-04-2017 தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் முன்முயற்சியில் தமிழக அரசின் சார்பில் நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ஜெயகுமார், வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.பி. உதயகுமார் மற்றும் கல்விதுறை அமைச்சர் மாண்புமிகு கே.எ. செங்கோட்டையன் , நிதித்துறை செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப. ஆகியோருடன் போராடும் ஊழியர்களின் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை நடத்திட தமிழக அரசு அழைத்ததின் பேரில் பேச்சுவார்த்தை 26-4-2017 மாலை 4 மணியளவில் தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

அரசு ஊழியர்கள் தரப்பில் புதிய பென்சன் ரத்து, ஊதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன் சங்கங்களுடன் பேசி மாற்றம் செய்வது, இடைக்கால நிவாரணம் 20 சதவீதம், சிறப்புக் காலமுறை ஊதியத்தில் உள்ளவர்களுக்கு முறையான காலமுறை ஊதியம், சாலைப்பணியாளர்களுக்கு 41 மாத டிஸ்மிஸ் காலத்தை பணிவரன்முறை செய்வது குறித்து பேசப்பட்டது.

அரசு தரப்பில், அமைச்சர்கள் மற்றும் நிதித்துறை செயலாளர் சார்பில் ஊதியமாற்றத்திற்கு முன் சங்கங்களை அழைத்துப்பேசி ஊதிய மாற்றம் செய்வது, புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவது உள்ளிட்ட அத்தனை கோரிக்கைகளும், நிதி சாராத கோரிக்கைகளையும் உடனடியாக சரி செய்ய ஜுலை மாதம் வரை அவகாசம் கோரப்பட்டது. சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றுகிறோம் என ஒப்புகொண்டனர்.

எனவே அரசின் கோரிக்கையை ஏற்று நல்லெண்ண அடிப்படையில் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக இன்று 26-04-2017 விலக்கிக்கொள்வதென முடிவெடுக்கப்பட்டது.

ஆதரவளித்த அனைத்து ஊடகங்களக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

(மு.அன்பரசு)
பொதுச்செயலாளர்